

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 334 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆனி 31 – புதன்கிழமை 15 ஜூலை 2026 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 334 : Thiruvalluvar Year - 2057 - Aani 31 - Wednesday 15 July 2026 - Dak 8 Pages ₹ 5.00


## பாலியல் தொல்லை கொடுத்து, பெண்ணை கடத்த முயன்ற த.வெ.க. நிர்வாகி!

*கரூர், ஜூலை 15 -*

குளித்தலை அருகே இளம்பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்ததோடு, அப்பெண்ணை த.வெ.க. நிர்வாகி கடத்த முயன்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கரூர் மாவட்டம் குளித்தலையில் திருமணம் ஆன பெண்ணிற்கு, கிருஷ்ணராயபுரம் கிழக்கு ஒன்றிய தவெக செயலாளர் ரமேஷ் கடந்த 3 மாதங்களாக தொடர்ந்து பாலியல் தொல்லை தந்துள்ளார். இந்நிலையில் இரு சக்கர வாகனத்தில் சென்ற பெண்ணை வழி மறித்து, பாலியல் தொல்லை கொடுத்ததோடு, , அப்பெண்ணை கடத்த முயற்சித்துள்ளார்.

இதனைக்கண்ட அக்கம் பக்கத்தினர், தவெக ஒன்றிய செயலாளர் ரமேஷுக்கு தர்ம அடி கொடுத்து காவல்நிலையத்தில் ஒப்படைத்தனர்.

இது குறித்து பெண்ணின் உறவினர்கள் குளித்தலை புகார் அளித்தும், த.வெ.க. நிர்வாகி என்பதால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் பொதுமக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

## ‘திராவிட மாடல்’ அரசு தொடங்கிய

# அகழாய்வுப் பணிகளைப் புதிய அரசும் தொடர வேண்டும்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, ஜூலை 15 -**

**தி.மு.க. அரசு தொடங்கிய அகழாய்வுப் பணிகளைப் புதிய அரசும் தொடர வேண்டும் என்றும் இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாற்றினைத் தெற்கிலிருந்து தொடங்கி எழுதுவோம் என்றும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.**

**தென்காசி மாவட்டம் மலையடிப்பட்டி கிராமத்தில் தமிழக அரசின் தொல்லியல் துறை மேற்கொண்ட கள ஆய்வு மற்றும் அகழாய்வில், சுமார் 2,500 ஆண்டுகள் பழமையான சங்க காலத்தைச் சேர்ந்த சதுர வடிவ செங்கல் படிக் கிணறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது தமிழக தொல்லியல் வரலாற்றில் ஒரு முக்கிய மைல்கல்லாகக் கருதப்படுகிறது. இதன் கள ஆய்வை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என தற்போது பொறுப்பேற்றுள்ள அரசை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.**



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் தெரிவித்திருப்பதாவது:-

தொடர்ந்து வெளிப்படும் தமிழர் தொன்மையின் தடங்களைப் பாதுகாப்போம்! தடங்கல் எதுவரினும், வரலாற்று உண்மையை நிறுவுவோம்!

திராவிட மாடல் அரசு தொடங்கிய அகழாய்வுப் பணிகளைப் புதிய அரசும் தொடர்ந்து மேற்கொண்டு, தமிழர் வரலாற்றுத் தடங்களை உலகறியச் செய்ய வேண்டும்.

**இரும்பின் தொன்மை!**

தமிழரின் வரலாற்றையும் நமது பண்பாட்டையும் குறைத்துக் கூறியும், சிதைத்து எழுதியும் வருவதோடு, வரலாற்றைத் திரிபுவாதங்களால் திசை திருப்பும் சூழ்ச்சிகளும் அரங்கேறும் காலத்தில், தமிழ்த் தொன்மை உண்மைச் சான்றுகளோடு வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதுதான் கீழடி, பொருநை, இரும்பின் தொன்மை!

மண்ணுக்குள்ளும் ஆழ்கடலுக்குள்ளும் மறைந்திருக்கும் இன்னும் பல கீழடிகளை மேலே கொண்டு வருவோம். இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாற்றினைத் தெற்கிலிருந்து தொடங்கி எழுதுவோம்! வரலாற்றில் பெருமிதம் கொள்வதோடு, புதிய வரலாற்றைப் படைத்திடவும் பலம் பெறுவோம்!

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

## பெரம்பூர் ரயில் பெட்டி தொழிற்சாலையில்

# தெற்கு ரயில்வேக்காக 40 எல்.எச்.பி. பெட்டிகள் தயாரிப்பு!

*சென்னை, ஜூலை 15 -*

பெரம்பூர் ரயில் பெட்டி தொழிற்சாலையில், தெற்கு ரயில்வேக்காக கடந்த மாதத்தில் மட்டும் 40 நவீன ரக எல்எச்பி பெட்டிகள் தயாரித்து வழங்கப்பட்டுள்ளன.

ரயில் பயணிகளின் பாதுகாப்பை அதிகப்படுத்தவும், வசதியான பயணத்துக்காகவும் சாதாரண பெட்டிகளுக்கு மாற்றாக, எல்எச்பி என்னும் நவீன பெட்டிகள் விரைவு ரயில்களில் பொருத்தப்படுகின்றன.

எல்எச்பி பெட்டிகள் சென்னை, பெரம்பூர் ரயில் பெட்டி தொழிற்சாலையில் (ஐசிஎஃப்) தயாரிக்கப்பட்டு, பல்வேறு ரயில்வே மண்டலங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

அந்த வகையில், தெற்கு ரயில்வேக்காக, கடந்த மாதத்தில் 40 எல்எச்பி பெட்டிகள் தயாரிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து, ரயில்வே அதிகாரிகள் கூறியதாவது: தெற்கு ரயில்வேயில் பல்வேறு வழித்தடங்களில் இயக்கப்படும் முக்கிய ரயில்களில் சாதாரண ரயில் பெட்டிகளை நீக்கி, எல்எச்பி என்னும் நவீன பெட்டிகள் இணைக்கப்படுகின்றன. இந்த பெட்டிகள் பொருத்தவரை சென்னை ஐசிஎஃப் ஆலையில் தயாரித்து வழங்கப்படுகின்றன.

கடந்த மாதம் தெற்கு ரயில்வேக்காக 40 எல்எச்பி பெட்டிகள் ஐசிஎஃப்ல் தயாரிக்கப்பட்டுள்ளன. மன்னை விரைவு ரயில், சேது விரைவு ரயில், பராசூரன், ஏலகிரி, ஏற்காடு ஆகிய விரைவு ரயில்களுக்காக இந்த எல்எச்பி பெட்டிகள் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

ஐசிஎஃப் ஆலையில் தெற்கு ரயில்வேக்காக, நடப்பாண்டில் ஜனவரி முதல் ஜூன் வரை 478 பெட்டிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர். சென்னை ஐசிஎஃப் ஆலையில் நடப்பு நிதியாண்டில் 3,778 பெட்டிகள் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# நாகர்கோவில் கிளைச் சிறையில் கைதி அடித்துக் கொலை?

## உறவினர்கள் மறியல்; காவல்துறை மீது பரபரப்பு புகார்!

*நாகர்கோவில், ஜூலை 15*

நாகர்கோவில் சிறையில் விசாரணை கைதியாக அடைக்கப்பட்டு இருந்தவர் மர்மமான முறையில் உயிரிழந்த சம்பவத்தில் காவல்துறையினர் மீது உறவினர்கள் பரபரப்பு குற்றம் சாட்டியுள்ளனர்.

கன்னியாகுமரி மாவட்டம் ஈத்தங்காடு நாராயணன்புதூர் பகுதியை சேர்ந்த மாற்றுத்திறனாளியான சபரி வர்மன் என்பவர் புகையிலைப் பொருட்கள் விற்பனை செய்ததாக கைது செய்யப்பட்டு நாகர்கோவில் சிறையில் அடைக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் அதிகாலையில், சிறையில் சபரிவர்மன் மயக்க நிலையில் கிடந்ததாக கூறப்படுகிறது. ஆசாரிபள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது அவர் இறந்தது தெரிய வந்தது.

அவரது உடலை அவசரமாக பிணவறைக்குள் கொண்டு சென்றது ஏன்? உடலை ஏன் காட்டவில்லை என கூறி, போலீசாரிடம் உறவினர்கள் வாக்குவாதம் செய்தனர்.

சபரிவர்மனின் குடும்பத்தினர், உறவினர்கள் மருத்துவக்கல்லூரி மெயின் ரோட்டில் மறியலில் ஈடுபட்டனர். சபரிவர்மனின் கையில் முறிவு போன்ற காயம் உள்ளதாகவும் முதுகில் ரத்த கட்டுகள் இருப்பதாகவும் காவல்துறையினர் தாக்கியே அவர் உயிரிழந்ததாகவும் உறவினர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

சபரிவர்மன் மரணத்தில் முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர். சிறையில் இருந்தபோது உயிரிழந்த சபரிவர்மனின் குடும்பத்துக்கு 1 கோடி ரூபாய் நிதி மற்றும் அவரது மனைவிக்கு அரசு வேலை வழங்க வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளனர்.

தமிழ்நாட்டில் த.வெ.க ஆட்சி பொறுப்பேற்றதில் இருந்து த.வெ.க. நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆய்வு என்ற பெயரில் பல்வேறு குளறுபடிகள் செய்து வருகின்றனர்.

அதுமட்டுமின்றி இந்த ஆட்சியில் தொடர்ந்து நடைபெறும் பாலியல் வன்கொடுமை, கொலை, கொள்ளை என்று சட்டம் ஒழுங்கு சீர்கேடுகளில் தற்போது லாக்கப் டெத்தும் இணைந்து விட்டதா என்று மக்கள் அச்சம் கொண்டுள்ளனர்.

## மூடப்பட்ட மணல் குவாரிகளை மீண்டும் திறக்க த.வெ.க. அரசு முடிவு!

# டெல்டா மாவட்ட விவசாயிகள் கடும் கண்டனம்!

## பாலைவனமாக்கும் சதித்திட்டம் என போர்க்குரல்!

**தஞ்சை, ஜூலை 15 -**

**டெல்டா மாவட்டங்களில் மூடப்பட்ட மணல் குவாரிகளை மீண்டும் திறக்க அனுமதி அளித்துள்ள த.வெ.க. அரசுக்கு விவசாயிகளும், அரசியல் கட்சித் தலைவர்களும் கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளார். காவிரி டெல்டாவை பாலைவனமாக்கும் சதித்திட்டம் என விவசாயிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.**

தமிழ்நாட்டில் கொரோனா பெருந்தொற்று காலத்திற்கு முன் 48 மணல் குவாரிகள் செயல்பட்டு வந்தன. பெருந்தொற்று காலத்தில் அனைத்து மணல் குவாரிகளும் மூடப்பட்டன. அதன்பின் காவிரி, கொள்ளிடம், வைப்பாறு, வெள்ளாறு உள்ளிட்ட 9 ஆறுகளில் மொத்தம் 25 மணல் குவாரிகள் திறக்கப்பட்டு, 23 குவாரிகள் மட்டுமே செயல்பட்டு வந்தன.

மணல் குவாரிகளில் முறைகேடு நடைபெறுவதாக எழுந்த புகாரில் அமலாக்கத்துறை சோதனை மேற்கொண்டது. இதனையடுத்து, டெல்டா மாவட்டங்களில் உள்ள மணல் குவாரிகள் மூடப்பட்டது.

தற்போது டெல்டாவில் 12 மணல் குவாரிகளை திறக்க த.வெ.க. அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதற்கு விவசாயிகளும், அரசியல் கட்சித் தலைவர்களும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். இது காவிரி டெல்டாவை பாலைவனமாக்கும் சதித்திட்டம் என விவசாயிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

12 ஆற்று மணல் குவாரிகளில் பெரும்பாலானவை தஞ்சாவூர், திருவாரூர், திருச்சி போன்ற டெல்டா மாவட்டங்களின் ஆற்றுப் படுகைகளிலும், சில குவாரிகள் அண்டை மாவட்டங்களின் ஆற்றுப்படுகைகளிலும் உள்ளன.

அமலாக்கத்துறை சோதனைகளால் கடந்த இரண்டரை ஆண்டுகளுக்கும் மேலாக மூடப்பட்டிருந்த இந்தக் குவாரிகளை, கடுமையான மணல் தட்டுப்பாடு மற்றும் கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் நோக்கில் மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

தற்போதைய அரசு திட்டமிட்டுள்ளபடி காவிரியின் டெல்டா ஆற்றுப் படுகைகளில் மூடப்பட்ட மணல் குவாரிகள் மீண்டும் திறக்கப்பட்டால், நிலத்தடி நீர்மட்டம் கடுமையாகப் பாதிக்கப்படும் என டெல்டா பகுதி விவசாயிகள் அதிர்ச்சி அடைந்து உள்ளதோடு, தங்களது கடும் எதிர்ப்பை பதிவு செய்து வருகின்றனர்.

## பெரம்பூர் தொகுதியில்

# தூய்மைப் பணியாளர்களை அவமதித்த விஜய்!

## கைகுலுக்க வந்த பெண்களை புறக்கணித்தார்!

**சென்னை, ஜூலை 15 -**

**ஆட்சிக்கு வந்து 2 மாதங்களுக்கு பிறகு சொந்த தொகுதியான பெரம்பூர் சென்ற முதலமைச்சர் விஜய், சாமானிய மக்களை, அருகில் கூட நிற்க விடாமல் புறக்கணித்ததும், கை குலுக்க வந்த மக்களை கொஞ்சம் கூட மதிக்காமல் தட்டிவிட்ட விஜயின் ஆணவத்திற்கு கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன.**

ஆட்சிக்கு வந்தால் ஒவ்வொரு மாதமும் தொகுதிக்கு வருவேன் என்று சொன்னவர் விஜய். ஆனால், தவெக அரசு அமைந்து 2 மாதங்கள் ஆகிறது. தனது சொந்த தொகுதியான பெரம்பூர் தொகுதி மக்களுக்கு நன்றி கூறுவதற்கு கூட, செல்லாதவர் தான் முதலமைச்சர் விஜய்.

இரண்டு மாதங்கள் கழித்து நேற்று முன்தினம் தான் பெரம்பூர் தொகுதி, அவருக்கு நினைவுக்கு வந்துள்ளது. அங்கும் சினிமா போட்டோ ஷூட் போல சில நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார்.

இந்நிலையில், பெரம்பூர் நிகழ்ச்சிகளில் சாமானிய மக்களை விஜய் அவமானப்படுத்தியது அம்பலமாகியுள்ளது. சாமானிய மக்களிடம் கைகுலுக்க விஜய் மறுத்து விட்டார். சாமானிய மக்களின் கைகளை விஜயின் பாதுகாவலர்கள் தட்டிவிட்டனர். சாமானிய மக்களை விஜய் அவமதித்த வீடியோ சமூகவலைதளங்களில் வைரலாகி வருகிறது.

போட்டோவுக்கு போஸ் கொடுக்க மட்டும் சாமானிய மக்களை அருகே நிற்கவைத்த விஜய், பின்னர், அவர்களுடன் கைகுலுக்கக் கூட மறுத்து புறம்தள்ளியது அருவருக்கத்தக்க செயல் என்று நெட்டிசன்கள் சாடியுள்ளனர்.

கைகுலுக்க வந்த பெண்களை தடுத்த பாதுகாவலர்களைகூட ஏன் தடுக்கிறீர்கள் என்று விஜய் கேட்கவில்லை என்று நெட்டிசன்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

## அருணாச்சலப்பிரதேசத்தில்

# தொடர் மழை 1 இலட்சம் மக்கள் பாதிப்பு!

## ஆறுகளில் வெள்ளப்பெருக்கு அபாய எச்சரிக்கை!

*இட்டாநகர், ஜூலை 15-*

அருணாச்சல பிரதேசத்தில் பெய்து வரும் தொடர் கனமழை. அதனால் ஏற்பட்டுள்ள நிலச்சரிவில் சிக்கி இதுவரை 7 பேர் உயிரிழந்துள்ளனர்; 29 பேர் காயமடைந்துள்ளனர். மாநிலத்தின் 425 கிராமங்களைச் சேர்ந்த 97,182 மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக மாநில அவசரக் கால செயல்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

குமே ஆற்றின் மேல்நிலைப் பகுதியில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தால் டாமின் மற்றும் பார்சி பார்லோ வட்டங்கள் பெரும் சேதத்தைச் சந்தித்துள்ளன. அப்பகுதிகளில் பாலங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதுடன், அரசு ஆய்வு மாளிகை, தேவாலயம் மற்றும் முன்னணி கல்வி நிறுவனமான செயின்ட் தாமஸ் பள்ளியும் நீரில் மூழ்கியுள்ளன.



இதுபோல பக்ரோ கிராமம் அருகே ஏற்பட்ட பிரம்மாண்ட நிலச்சரிவால் 13ம் எண் தேசிய நெடுஞ்சாலை முற்றிலும் முடங்கியுள்ளது. சேலா சுரங்கப்பாதைச் சாலையின் ஒரு பகுதி அடித்துச் செல்லப்பட்டதால், பயணிகள் பழைய சேலா சாலையைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதேபோல், போதின்கிமின் சாலையும் முடங்கியுள்ளது.

இந்த வெள்ளப் பெருக்கால் 541.75 ஹெக்டேர் பயிர் நிலங்களும், 1,010 ஹெக்டேர் வனப் பகுதியும் நாசமாகியுள்ளன. மேலும் 150 சாலைகள், 19 பாலங்கள், 221 குடிநீர் விநியோகக் கட்டமைப்புகள், 58 அரசு கட்டிடங்கள், நீர் மின் நிலையங்கள், மருத்துவமனைகள், பள்ளிகள் மற்றும் நூற்றுக்கணக்கான வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளன. தற்போது, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை முடுக்கிவிட மாவட்ட நிர்வாகம், துணை ராணுவப் படைகள் மற்றும் காவல் துறையுடன் இணைந்து தீவிர ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.